பிற்பகல் 12-25

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. Guillotine நேரம் வந்துவிடும். (குறுக்கீடுகள்) No, No, Not allowed. உட்காருங்கள். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, (குறுக்கீடுகள்) பொதுக் கணக்குக் குழுவின் தலைவர், (குறுக்கீடுகள்) காலையிலே பேசிவிட்டோம். திரு. ஞானசேகரன், உட்காருங்கள். திரு. கரி. இராமசாமி, (குறுக்கீடு) உங்களைக் குழுவின் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு)

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தைந்தாவது முதல் அறுபத்தேழாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தேழாவது முதல் அறுபத்தொன்றாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.